# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2080/27 - 2018 ජූලි මස 16 වැනි සඳුදා - 2018.07.16

*2080/27 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாத்துறைச் சட்டம்***

2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, 70 ஆவது பிரிவின் காணிச் சட்டத்தின் பிரகாரம் எனக்குரித்தாக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு சுற்றுலா அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ அலுவல்கள் அமைச்சர் ஜோன் அந்தோனி இம்மானுவேல் அமரதுங்க ஆகிய நான், காணி சுவீகரிப்பின் 49(எ) ஆம் பிரிவின் பிரகாரம் கீழ்க்குறிப்பிட்ட அட்டவணையின்படி இலங்கைச் சுற்றுலா அபிவிருத்திச் சபையின் மூலம் அபிவிருத்தி செய்வதற்கு எண்ணியுள்ளதை இக்கட்டளை மூலம் அறியத்தருகின்றேன்.

ஜோன் அந்தோனி இம்மானுவேல் அமரதுங்க,
சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2018, யூலை 12.*

**அட்டவணை**

வட மாகாணத்தின் மன்னார் மாவட்டத்தின் மன்னார் நகரப் பிரதேச செயலாளர் பிரிவின் துள்ளுக்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில் பவிளுப்பட்டான் கட்டடக் குடியிருப்புக் கிராமத்தில் அமைந்துள்ள இக்காணித்துண்டானது 145.4 ஹெக்டேயர் (359 ஏக்கர் 1 றூட் 6 பேர்ச்) நில அளவை மதிப்பீட்டின்படி இல. MA/DSO/2017/126 லொட் இலக்கம் 'ஏ' என குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு : சுவாமித் தோட்டம் (இதனையொத்த ஒரு நிலத்தின் பகுதி) மற்றும் பாதை (வீ. அ. அ) ;
கிழக்கு : சுவாமித் தோட்டம் (இதனையொத்த ஒரு பகுதியின் நிலம்) ;
தெற்கு : சுவாமித் தோட்டம் (இதனையொத்த ஒரு பகுதி நிலம்) மற்றும் கரையோர இட ஒதுக்கீடு ;
மேற்கு : சுவாமித் தோட்டம் (இதனையொத்த ஒரு பகுதி நிலம்).

*08-69*